# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**


# அரையாண்டுத் தேர்வு

## 2019 – 2020

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 10

சுட்டெண்:..............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வினாப்பொருளை உணர்த்தி வரும் எழுத்து

   அ) எ ☐ ஆ) ஆ ☐

   இ) ஒ ☐ ஈ) ஏ ☐

2. நெட்டெழுத்தின் மாத்திரை

   அ) 1 மாத்திரை ☐ ஆ) 1/2 மாத்திரை ☐

   இ) 3 மாத்திரை ☐ ஈ) 2 மாத்திரை ☐

3. இமயத்தில் விற்கொடி பொறித்த மன்னன்

   அ) நெடுஞ்சேரலாதன் ☐ ஆ) இளங்கோ ☐

   இ) நெடுஞ்செழியன் ☐ ஈ) கரிகாலன் ☐

4. சொல்லின் இறுதியில் வரும் மெல்லின மெய் எழுத்துகள்

   அ) ண், ம், ன் ☐ ஆ) ஞ், ங், ந் ☐

   இ) ன், ஞ், ங் ☐ ஈ) ம், ந், ங் ☐

5. காவிரியை இள மங்கையாக உருவகித்துப் பாடியவர்

   அ) கம்பர் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐

   இ) கபிலர் ☐ ஈ) முடியரசன் ☐

6. தீமை ஒழிக! - இச்சொல்லியம்

   அ) ஏவல் ☐ ஆ) வியங்கோள் ☐

   இ) வினா ☐ ஈ) கூற்று ☐

7. ஆறு பிரிக்கும் மேட்டுநிலம் எனப்படுவது

அ) ஆற்றிடைக்குறை ☐ ஆ) மேட்டுநிலம் ☐

இ) ஆற்றங்கரை ☐ ஈ) குறைநிலம் ☐

8. செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்ற இடம்

அ) வஞ்சி ☐ ஆ) இமயம் ☐

இ) திருச்செங்குன்றம் ☐ ஈ) பொதிகை ☐

9. காரணம் தெரியாமல் குறியீடாக வழங்கி வரும் பெயர்

அ) இடுகுறிப்பெயர் ☐ ஆ) காரணப்பெயர் ☐

இ) காரண இடுகுறிப்பெயர் ☐ ஈ) தொழிற்பெயர் ☐

10. 'திராவிடமொழிநூல் ஞாயிறு' என்ற பட்டத்தைப் பெற்றவர்

அ) மறைமலையடிகள் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) பரிதிமாற்கலைஞர் ☐ ஈ) பாரதியார் ☐

11. உண்டு - என்பது

அ) குறிப்பு வினைமுற்று ☐ ஆ) தன்வினை ☐

இ) தெரிநிலை வினைமுற்று ☐ ஈ) உடன்பாட்டுவினை ☐

12. மருத நிலத்தில் நாட்டிய மங்கையராக நடனமாடுபவை

அ) குயில்கள் ☐ ஆ) கிளிகள் ☐

இ) முகில்கள் ☐ ஈ) மயில்கள் ☐

13. பஃறுளி ஆற்றுக்கும் குமரி ஆற்றுக்கும் இடையே இருந்த நாடுகள்

அ) 39 ☐ ஆ) 25 ☐

இ) 49 ☐ ஈ) 40 ☐

14. நின்றான் - இதன் பகுதி

அ) நின் ☐ ஆ) நில் ☐

இ) நின்று ☐ ஈ) நின்ற ☐

15. சிலப்பதிகாரத்தில் தென்னவன் என அழைக்கப்படும் மன்னவன்

அ) சேரன் ☐ ஆ) சோழன் ☐

இ) பாண்டியன் ☐ ஈ) பல்லவன் ☐

16. மருங்கு என்பது

அ) நண்பகல் ☐ ஆ) காலை ☐

இ) பக்கம் ☐ ஈ) யாமம் ☐

17. காலத்தால் முந்திய ஊடகம்

அ) செய்தித்தாள் ☐ ஆ) வானொலி ☐

இ) இணையம் ☐ ஈ) தொலைக்காட்சி ☐

18. ஏனென்டால் என்ற பேச்சு வழக்குச் சொல்லின் செவ்வழக்கு

அ) ஏனென்டாள் ☐ ஆ) ஏனென்றால் ☐

இ) எனன்றால் ☐ ஈ) ஏனென்ரால் ☐

19. குமரிக்கண்டம் குமரிமுனைக்கு ________ பரந்திருந்தது.

அ) தெற்கே ☐ ஆ) வடக்கே ☐

இ) கிழக்கே ☐ ஈ) மேற்கே ☐

20. அஃகேனம் என்று குறிக்கப்படும் எழுத்து

அ) மெய்யெழுத்து ☐ ஆ) ஆய்த எழுத்து ☐

இ) நெட்டெழுத்து ☐ ஈ ) உயிரெழுத்து ☐

21. ஓர் எழுவாயில் பல சொல்லியங்கள் தொடரும் இடங்களில் வருவது

அ) முக்காற்புள்ளி ☐ ஆ) முற்றுப்புள்ளி ☐

இ) காற்புள்ளி ☐ ஈ ) அரைப்புள்ளி ☐

22. கொண்டல்கள் எனக் கூறப்படுபவை

அ) முகில்கள் ☐ ஆ) மயில்கள் ☐

இ) வண்டுகள் ☐ ஈ ) குவளைகள் ☐

23. ஈழத்துத் தமிழறிஞர்

அ) பாரதியார் ☐ ஆ) ந.சி.கந்தையா ☐

இ) பாவேந்தர் ☐ ஈ ) மறைமலையடிகள் ☐

24. கேட்டல் பொறிமுறை ஊடகம்

அ) தொலைக்காட்சி ☐ ஆ) இணையம் ☐

இ) செய்தித்தாள் ☐ ஈ ) வானொலி ☐

25. கற்றல் என்பது

அ) தொழிற்பெயர் ☐ ஆ) சினைப்பெயர் ☐

இ) குணப்பெயர் ☐ ஈ ) பொருட்பெயர் ☐

26. ‘‘ஒற்றுமை வலிமை தரும்’’ என்பதைக் குறிக்கும் பழமொழி

அ) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு ☐

ஆ) சிறுதுளி பெருவெள்ளம் ☐

இ) நிறைகுடம் தளம்பாது ☐

ஈ) கடுகு சிறிது காரம் பெரிது ☐

27. பெருந்துயருடன் வேங்கை மரத்தின் கீழ் வந்து நின்ற பெண்

அ) கோமகள் ☐ ஆ) ஔவை ☐

இ) மாதவி ☐ ஈ) கண்ணகி ☐

28. நான் தாயகத்தில் துயிலும் இல்லங்களைப் பார்த்தேன். இச் சொல்லியத்தில் உள்ள வேற்றுமை உருபுகள்

அ) இல்,ஐ ☐ ஆ) ஆல்,கு ☐

இ) இல்,இன் ☐ ஈ) அது,ஐ ☐

29. எள் + நெய்

அ) எள்நெய் ☐ ஆ) எண்நெய் ☐

இ) எண்ணை ☐ ஈ) எண்ணெய் ☐

30. இலங்கை ________ கடற்கோளில் தனித்தீவாகியது.

அ) மூன்றாவது ☐ ஆ) இரண்டாவது ☐

இ) முதலாவது ☐ ஈ) நான்காவது ☐

புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழ் நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது கீழடி எனும் சிற்றூர். இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழரது வரலாற்றை அறிய உதவுகின்றன. தமிழ் இனத்தின் தொன்மை தொடர்பான கருத்துகளை மாற்றுபவையாக உள்ளன. கிறித்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன், கழககாலம் தொடங்கியதாக இதுவரை கருதப்பட்டது. ஆனால், கீழடியில் நடைபெற்ற ஆய்வில் கிடைத்த சான்றுகளை வைத்துப் பார்க்கும் போது, கழககாலம் கிறித்து பிறப்பதற்கு 6 நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது என்பது உறுதியாகின்றது. அத்துடன் சிந்துவெளி நாகரிகத்திற்கும் கீழடி நாகரிகத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதும் தெரிய வருகிறது. கீழடியில் கிடைத்த கீறல்கள் கொண்ட பானை ஓடுகளை ஒத்த பானை ஓடுகள் சிந்துவெளி யிலும் கிடைத்துள்ளன. அத்துடன் அணிகலன்கள், எழுத்தாணிகள், சுடுமண் பொம்மைகள், தாயக்கட்டை, சதுரங்கக்காய்கள் என்பனவும் கிடைத்துள்ளன. கீழடியில் வாழ்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டிருக்கின்றனர். கழக இலக்கியப்பாடல்களில் காணப்படும் பொருட்கள் அனைத்தும் கீழடியில் கிடைத்திருப்பதாக வரலாற்று ஆய்வாளர்களும் கழகத்தமிழ் ஆர்வலர்களும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர்.

1. கீழடி ஆய்வின் பின், கழககாலம் எத்தனையாம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதப்படுகிறது?

______________________________

______________________________

2. எவை தமிழ் இனத்தின் தொன்மை தொடர்பான கருத்துகளை மாற்றுபவையாக உள்ளன?

______________________________

______________________________

3. இங்கு வாழ்ந்த மக்கள் எத்தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர்?

______________________________

______________________________

4. கீழடி நாகரிகத்துடன் தொடர்புடையதாக உள்ள நாகரிகம் எது?

______________________________

______________________________

5. வரலாற்று ஆய்வாளர்களும் கழகத்தமிழ் ஆர்வலர்களும் மகிழ்ச்சியுடன் தெரிவித்த செய்தி யாது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. குமரிக்கண்டம் கடலில் மூழ்கிப்போன செய்தியைக் கூறும் நூல்கள் இரண்டைத் தருக.

_______________________________________________

_______________________________________________

2. தொலைக்காட்சியின் சிறப்பியல்புகள் எவை?

_______________________________________________

_______________________________________________

3. கண்ணகி, கோவலன் கதையைச் செங்குட்டுவனுக்கு எடுத்துரைத்த புலவர் யார்?

_______________________________________________

_______________________________________________

4. மணிப்பவள நடை என்றால் என்ன?

_______________________________________________

_______________________________________________

5. கடற்கோளின் போது குமரிக்கண்டத்திலிருந்து பிரிந்த பெரும் நிலப்பரப்புகள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

6. சிந்துவெளி, சுமேரிய நாகரிகங்கள் எவ்வாறு தோன்றின?

_______________________________________________

_______________________________________________

7. பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள் ஆகியோர் தொடங்கிய அமைப்பு எது?

_______________________________________________

புள்ளிகள் 10

**4. கீழுள்ள கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதுக.**

அமிழ்தினும் இனிய நம் மொழி
ஆண்டாண்டுகளாய் வாழும் மொழி

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. மெய்யெழுத்துகள் ஒலி அடிப்படையில் எத்தனை வகைப்படும்? அவை எவை?

   ______________________________

2. கீழுள்ள பேச்சுவழக்குச் சொற்களை செவ்வழக்காக மாற்றி எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| பாவக்காய் | ____________ | குடுத்தேன் | ____________ |
| விளாடினான் | ____________ | வாறேன் | ____________ |
| எப்பவும் | ____________ | தேத்தண்ணி | ____________ |

3. தரப்பட்டுள்ள சொல்லியங்களின் வேற்றுமை ஏற்ற சொற்களையும் வேற்றுமை உருபுகளையும் கண்டறிந்து எழுதுக.

   தமிழரது வீரம் பற்றிப் புறநானூறு கூறுகிறது.
   தஞ்சைப்பெருங்கோவிலைக் கட்டியவன் இராசராசசோழன்.
   சங்கிலி மன்னன் வன்னியத்தேவனால் காட்டிக்கொடுக்கப்பட்டான்.

| வேற்றுமை ஏற்றசொல் | வேற்றுமை உருபு |
|---|---|
| ____________ | ____________ |
| ____________ | ____________ |
| ____________ | ____________ |

4. பின்வரும் சொல்லியங்களின் ஆகுபெயர்களை எழுதுக.

   அ) திருவிழாவிற்கு ஊரெல்லாம் திரண்டு வந்தது. ____________
   ஆ) நண்பர்கள் பொங்கல் உண்டனர். ____________
   இ) உழவர் நெல் அறுவடை செய்தனர். ____________

5. ஒவ்வொன்றிற்கும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

| | | |
|---|---|---|
| படர்க்கை | ____________ | ____________ |
| உரிச்சொல் | ____________ | ____________ |
| உவமைஅணி | ____________ | ____________ |

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**இலங்கையின் தொன்மையான மக்கள் தமிழர். எல்லாளன், சங்கிலியன், கயிலைவன்னியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்கள் நல்லாட்சி செய்தனர். ஐரோப்பியர்கள் இலங்கையைக் கைப்பற்றி தமது ஆட்சிக்குள் கொண்டுவந்தனர். இறுதியாக ஆண்ட ஆங்கிலேயர், ஆட்சியைச் சிங்களவரிடம் ஒப்படைத்தனர். சிங்களவரின் ஆட்சியின்போது தமிழர்கள் தமது வாழ்வுரிமைகளை இழக்கத் தொடங்கினர். இறுதியில் தமது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி, வெவ்வேறு நாடுகளில் பரந்து வாழும் நிலை உருவாகியது.**

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

✸ கடல் கொண்ட தமிழகம்

✸ முள்ளிவாய்க்காலும் ஈழப்போரும்

✸ சூழல் மாசடைதல்

- சூழல் மாசடைதல் என்றால் என்ன?
- சூழல் எதனால் மாசுபடுகின்றது?
- அதனால் ஏற்படும் தீமைகள்
- அதைத் தடுக்கும் வழிகள்

புள்ளிகள் 20